மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் வெ. புருஷோத்தமன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு வகுப்புகளில் தேவைக்கு அதிகமான மாணவர்கள், அதிலும் துறை சம்பந்தப்பட்டவர்களையே நியமனம் செய்வது பற்றி அரசுக்கு தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தேவைக்கு அதிகமான எண்ணிக்கையில் மாணவர்களைச் சேர்ப்பது அரசுக்குத் தெரியுமா என்பது கேள்வி.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வி பற்றி கேட்கிறார்கள் என்று கருதுகிறேன். இதிலே அதிகமான எண்ணிக்கையில் சேர்க்கப்படுவதில்லை. எவ்வளவு இடம் நிர்ணயிக்கப்படுகிறதோ அவ்வளவு தான் சேர்க்கப்படுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதை வைத்து, எந்த உயர் கல்வியில் அதிகமான எண்ணிக்கையில் தேவையில்லாமல் இருக்கிறது அல்லது எதில் குறைவாக இருக்கிறது என்பதைப் பார்த்து அதைச் சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 84—திரு. ம. தனபால்—மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

84—

குருவன்மேடு வரை செல்லும் பேருந்தை ரெட்டிப்பாளையம் வரை நீட்டித்தல்.

* 406 திரு. ம. தனபால்:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தாம்பரத்திலிருந்து குருவன்மேடு வரை செல்லும் பேருந்தை (தடம் எண் 55-எம்) மக்கள் நலன் கருதி ரெட்டிப்பாளையம் வரை நீட்டிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ம. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களிடமிருந்து 'ஆம்' என்ற பதிலை எதிர்பார்த்தேன். ஆனால் 'இல்லை' என்ற பதில் எனக்கு ஏமாற்றத்தை

அளித்திருக்கிறது. தமிழகத்தின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இன்றையதினம் தமிழகத்திலே எந்தப் பகுதியிலும் போக்குவரத்து வசதியே இல்லை என்ற ஒரு குறை இருக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிற சூழ்நிலையில், ஆயிரம் பேர் மக்கள் தொகை இருந்தால், 35 கிலோ மீட்டருக்குள்ளாக இருந்தால் அந்தப் பகுதிக்கு நகரப் பேருந்து வசதி கண்டிப்பாக செய்து தரப்படும் என்ற ஒரு ஆணையை அறிவித்திருக்கிறார்கள். இந்த நிலையில் ரெட்டிப்பாளையம் பகுதி 1,000 பேருக்கு மேலாகவும் 35 கிலோமீட்டருக்குள்ளாகவும் இருப்பதால் அந்தப் பகுதிக்கு பேருந்து விட அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து, அங்கே நகரப் பேருந்து போக்குவரத்து நடக்க ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடம் செங்கல்பட்டு—எம். ஜி. ஆர். மாவட்டம் வடக்குப்பட்டியிலிருந்து அந்தப் பகுதிக்கு 10 நடைகள் பேருந்துகள் இயக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதிக்கு ஒரே ஒரு பேருந்துதான் சென்றுகொண்டிருக்கிறது. ஆனால் அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள பல கிராமங்களில் இருக்கும் மக்கள் ரெட்டிப்பாளையத்திற்கு, கிட்டத்தட்ட குருவன்மேட்டிலிருந்து 3-4 கிலோ மீட்டருக்கு அப்பால் இருப்பதால், அங்கேயிருந்து நடந்து சென்றுதான் பஸ் ஏறுகின்ற சூழ்நிலை இருக்கிறது. அந்த நிலைமையைப் போக்க அந்தப் பகுதிக்கு போக்குவரத்து வசதிகளைச் செய்துதர ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரெட்டிப்பாளையம் 1,000 மக்கள் தொகைக்கு மேல் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அதற்கு இப்போது பேருந்து இருக்கிறது. ஆகவே மீண்டும் பேருந்துகள் விடப்பட அரசிடம் உத்தேசம் ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 85. டாக்டர் ச. சுந்தரராஜ்—மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

85—

மானாமதுரைக்கு சூசையப்பர்பட்டி வழியாக நகரப்பேருந்து.

* 1203 டாக்டர். எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரமக்குடியிலிருந்து மானாமதுரைக்கு சூசையப்பர்பட்டி வழியாக நகரப்பேருந்து விடப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?